# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL)
## 2009 / 2010 HELD IN DECEMBER - 2010

## GGY 3.12 – COMPARATIVE REGIONAL GEOGRAPHY

எவையேனும் **ஐந்து** (05) வினாக்களுக்கு விடையளிக்குக.
(உலகப் புறவுருவப்படம் வழங்கப்படும்)

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. அ) பிரதேசப் புவியியலின் வளர்ச்சிக்கு வித்திட்ட அறிஞர்களின் சேவைகளைப் பற்றி ஆராய்க.
(10 புள்ளிகள்)

ஆ) ஒப்பீட்டு பிரதேசப் புவியியல் நவீன புவியியல் வளர்ச்சிக்கு எந்தவகையில் வித்திட்டது என்பதனை உதாரணங்களுடன் விளக்குக.
(10 புள்ளிகள்)

02. அ) அபிவிருத்தி அளவீடு என்றால் என்ன?
(05 புள்ளிகள்)

ஆ) அபிவிருத்தியை அளவீடு செய்தவற்காகப் பயன்படும் நவீன வகை குறிகாட்டிகள் பற்றி விளக்கம் தருக.
(10 புள்ளிகள்)

இ) ‘மனிதவளக் குறிகாட்டி’ பற்றி விளக்குக.
(05 புள்ளிகள்)

03. அ) தென்கிழக்காசிய நாடுகளை இனங்காண்க.
(05 புள்ளிகள்)

ஆ) அதன் பௌதீகத் தோற்றப்பாட்டை மாதிரிப்படங்களை வைத்து விளக்குக.
(10 புள்ளிகள்)

இ) இந்நாடுகளின் அண்மைக்கால விருத்தி நிலைமைகள் பற்றி கருத்துக்கூறுக.
(05 புள்ளிகள்)

04. அ) இலங்கையின் நெற்செய்கைப் பரம்பல் படம் ஒன்று வரைக.
(05 புள்ளிகள்)

ஆ) நெற்செய்கை விருத்திக்கு ஏதுவான காரணிகள் எவை என ஆராய்க.
(05 புள்ளிகள்)

இ) நெற்செய்கையில் ஏற்பட்டுள்ள தடைகளை நீக்குவதற்காக இன்றைய அரசாங்கம் மேற்கொண்டுவரும் துரித நடவடிக்கைகள் பற்றி விபரிக்குக.
(10 புள்ளிகள்)

05. அ) ஐக்கிய அமெரிக்காவின் கைத்தொழில் வலயங்களை இனங்காண்க.
(05 புள்ளிகள்)

ஆ) அதன் அமைவிட முக்கியத்துவம் பற்றி படங்களின் உதவியுடன் விளக்குக.
(10 புள்ளிகள்)

இ) ஐக்கிய அமெரிக்காவின் கைத்தொழில் விருத்திக்கு சாதகமான காரணிகளை விளக்குக.
(05 புள்ளிகள்)

06. அ) 'சாஹேல்' எனப்படும் கறுப்பு ஆபிரிக்க நாடுகளை இனங்காண்க.
(05 புள்ளிகள்)

ஆ) இன்றுவரை அது விருத்தியடையாமைக்கான காரணிகள் எவை என ஆராய்க.
(05 புள்ளிகள்)

இ) தென் ஆபிரிக்காவின் விருத்தி நிலை பற்றியும் அதற்கான காரணிகள் பற்றியும் விளக்குக.
(10 புள்ளிகள்)

07. அ) அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் நகராக்கம் ஏற்படுவதற்கான காரணிகள் பற்றி விளக்குக.
(10 புள்ளிகள்)

ஆ) அபிவிருத்தியடைந்த நாட்டு நகராக்கப் போக்கு பற்றி ஆராய்க.
(10 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றுள் ஏதாவது <u>இரண்டிற்கு (02)</u> சிறுகுறிப்பு வரைக.

அ) இலங்கையின் எரிபொருள் நெருக்கடியும் தீர்வு நடவடிக்கைகளும்.
ஆ) பசுமைப்புரட்சி ஏற்படுத்திய நவீன மாற்றங்கள்.
இ) நகரக் குடியிருப்புக்களில் உள்ள குறை நிறைகள்.
ஈ) மில்லியன் நகரங்கள்.

(2 x 10 = 20 புள்ளிகள்)

*****